Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 145

திங்கட்கிழமை
20 ஏப்ரல் 2026

சித்திரை 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## வீடுடைத்து களவு தீர்ப்பு நாளை!

யாழ்ப்பாணம், ஏப்.20
கொடிகாமம் நாவலடி வீடுடைப்பு மற்றும் களவு வழக்கில் நாளை செவ்வாய்க்கிழமை தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.
இந்த வழக்கில் சுமார் 2 கோடியே 41 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை வீடுடைத்து களவாடியதாக அதே இடத்தைச் சேர்ந்த இளம் வர்த்தகர் ஒருவர் மீது குற் »11

### எரிசக்தி நெருக்கடியைத் தீர்க்க

# ரஷ்ய எரிபொருளுக்காக இலங்கை தீவிர முயற்சி

### மே மாதம் ரஷ்யா செல்கிறார் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்



கொழும்பு, ஏப்ரல் 20
ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் தீவிரமாக இறங்கியுள்ளது. எரிபொருள் மற்றும் நிலக்கரி கொள்வனவுக்கான ஒப்பந்தங்கள் தொடர்பாகத் தீர்மானங்களை எடுப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் எதிர்வரும் மே மாதம் ரஷ்யாவுக்குச் செல்லவுள்ளார். »11

## தமிழரசுக் கட்சிச் சிக்கல்களை பொதுவெளியில் பேசாதீர்கள்

### சி.வீ.கே.சிவஞானம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப்.20
இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளைப் பொது வெளியில் பேசுவதைத் தவிர்ப்போம் என்று சித்திரைப் புத்தாண்டில் திடசங்கற்பம் எடுக்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் »11

## ஆட்பதிவு திணைக்கள சேவைகள் வழமைக்கு

கொழும்பு, ஏப்.20
ஆட்பதிவு திணைக்களத்தின் தேசிய அடையாள அட்டை வழங்கல் ஒரு நாள் சேவை உட்பட பொதுமக்கள் சேவைகள் இன்று முதல் வழமை போன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
கணினி அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கடந்த 17ஆம் திகதிமுதல் ஆட்பதிவு »11

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஏப்.20
அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் இன்று »11

### 49 பேர் கொண்ட குழுவுடன்

## இந்தியத் துணை ஜனாதிபதி நேற்று இலங்கை வருகை

கொழும்பு, ஏப்.20
இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணன், இரண்டு நாள் உத்தியோகபூர்வ »11

### புதிய அரசமைப்பு உருவாக்கத்தில்

# கூட்டாட்சி முறைமைக்கு இந்திய அழுத்தம் தேவை

### இந்தியத் துணை ஜனாதிபதியிடம் தமிழ்த் தேசியப் பேரவை வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஏப்.20
புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்போது கூட்டாட்சி முறைமை உள்வாங்கப்படுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்திய அரசாங்கத்திடம் தமிழ்த் தேசியப் பேரவை வலியுறுத்தியுள்ளது.
இலங்கை வந்துள்ள இந்தியாவின் துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணன் நேற்று மாலை தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொழும்பில் சந்தித்தார்.
இந்தச் சந்திப்பில் தமிழ்த்தேசியப் »11

## அன்னை பூபதிக்கு உணர்வுபூர்வ அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப்.20
அன்னை பூபதியின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் நேற்று உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டன.
இந்திய இராணுவத்தின் »11

## ஆடைகளற்ற நிலையில் சிதைவுற்ற சடலம் மீட்பு

### கிளிநொச்சியில் பரபரப்பு

கிளிநொச்சி, ஏப்.20
கிளிநொச்சி, குமரபுரத்தில் ஆண் ஒருவரின் சடலம் ஆடைகளற்ற நிலையில் மீட்கப்பட்டுள்ளது. அடையாளம் காணமுடியாத நிலையில் காணப்படும் சடலம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். »10

## எதிர்வரும் ஞாயிறுவரையும் மிதமான மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஏப்.20
இன்றுமுதல் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளில் மிதமான மழை கிடைப் »10

## உழவியந்திரம் தடம்புரண்டு இளம் குடும்பஸ்தர் மரணம்

### வவுனியாவில் துயரம்

வவுனியா, ஏப்.20
உழவியந்திரம் தடம்புரண்டத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வவுனியா வடக்கு, மதியாமடுவில் நடந்துள்ளது.
உழவியந்திரத்தைச் »11

## ஆற்று நீரில் மூழ்கி இளைஞர் உயிரிழப்பு

### புதுக்குடியிருப்பில் சோகம்

முல்லைத்தீவு, ஏப்.20
புதுக்குடியிருப்பு, கள்ளியடிப் பிரதேசத்தில் உள்ள பேராற்றுப் பகுதியில் நீராடிய இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது.
புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 20 வயதுடைய »11

## கீரிமலை கடலில் மூழ்கி ஒருவர் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், ஏப்.20
கீரிமலைக் கடலில் மூழ்கி நேற்று மாலை ஒருவர் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம், கட்டுவனைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி சந்துரு (வயது-41) என்பவரே உயிரிழந்தவராவார்.
உயிரிழந்தவரும் வேறு சிலரும் நேற்று கீரிமலை தீர்த்தக் கேணியில் நீராடியுள்ளனர்.
உயிரிழந்தவர் »10



முச்சந்தி முரளி

"கோடை காலமெண்டிட்டு தண்ணியை லேசா நினைக்கக்கூடாது கண்டியளோ"

## ஓட்டோ மோதியதில் ஒன்றரை வயதுக் குழந்தை பலி

### மன்னாரில் சோகம்

மன்னார், ஏப்.20
பேக்கரி உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்ற முச்சக்கரவண்டி மோதியதில் ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.
இந்தச் சம்பவம் மன்னார், துர்க்கிசிட்டி கிராமத்தில் நேற்றுமுன்தினம் நடந் »11

மக்கள் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 44063 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 08 39 48 55 |
| விசேட எழுத்து | C |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1473 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 08 18 38 47 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0432 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 1 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2512 |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கங்கள் | 01 22 25 57 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6164 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 1 8 2 0 4 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2191 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 17 25 36 54 |
| விசேட எழுத்து | J |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0280 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 36 49 |

# தையிட்டி விகாரைக்கெதிராக வழக்கை தொடராவிடின் சபை புறக்கணிப்பு!

## ஐ.ம.சக்தி உறுப்பினர்கள் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்.20**

**சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக, வலிகாமம் வடக்குப் பிரதேச எதிர் சபை வரும் ஏப்ரல் 30ஆம் திகதிக்குள் வழக்குத் தாக்கல் செய்யாவிடின், சபை நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் இரு உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் தெரிவிக்கையில்,

தையிட்டிக் காணிகளை அளவிடப்போவதாகக் கூறி உரிமையாளர்களை வரவழைத்த போதிலும், விகாராதிபதியின் முறைப்பாட்டைக் காரணம் காட்டி அளவீட்டுப் பணிகள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளன. இது மக்களை ஏமாற்றும் ஒரு சூழ்ச்சி முயற்சி. காணி அளவீடு தொடர்பான விடயங்களை மாவட்டச் செயலர் உரிய முறைப்படி கையாளவில்லை. காதலர்கள் தொலைபேசியில் உரையாடுவது போன்று அரச அதிகாரிகள் நிர்வாக விடயங்களைக் கையாள முடியாது.

இவ்வளவு முக்கியமான பணிகளின் போது அமைச்சர் சந்திரசேகர் பிரசன்னமாகவில்லை. அவர் வெளிநாடு செல்வதாகக் இருந்தால், இப்பணியை வேறொரு நாளுக்கு ஒத்திவைத்திருக்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியினர் வெறும் "படம் காட்டுவதற்காகவே" மக்களிடம் வருகின்றனர். அவர்களுடன் இணைந்து யாழ். மாவட்டச் செயலர் இத்தகைய அரசியல் நாடகங்களுக்குத் துணையாகச் சிறுபிள்ளைத்தனமாக நடக்கக்கூடாது. என்றும் அவர் வலியுறுத்தினார்.

காணி உரிமையாளர்களுக்கு உத்தியோகபூர்வமாக கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கி, அனைவருடனும் கலந்துரையாடிய பின்னரே முடிவுகளை எடுக்கவேண்டும் - என்றார். (க-20)

# ஜனநாயகத்தின் தூண்களை உடைத்தெறிகிறது அரசு!

## கூறுகிறார் சாகர காரியவசம்

கொழும்பு,ஏப்.20

நாட்டின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில், தற்போதைய அரசாங்கம் பொலிஸ் மற்றும் நீதித்துறை உள்ளிட்ட அரச நிறுவனங்களைத் தனது அரசியல் தேவைகளுக்காகத் துஷ்பிரயோகம் செய்து வருகின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும் சட்டத்தரணியுமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயகத்தின் தூண்களாகக் கருதப்படும் நிறுவனங்கள் இன்று அரசாங்கத்தினால் தவறாகக் கையாளப்படுகின்றன.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஆளுங்கட்சியின் அரசியல் மேடைகளில் இருந்த ஒரு அதிகாரியின் கீழ் கொண்டுவரப்பட்டு, எதிர்க்கட்சியினரை ஒடுக்கும் கருவியாக மாற்றப்பட்டுள்ளது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம் எதிர்க்கட்சித் தலைவர்களைக் கைது செய்யச் சாட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்கின்றது. நேர்மையாகச் செயற்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தன்னிச்சையாகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை சட்டவிரோதமானது.

தனிமனித சுதந்திரம் மற்றும் பிரஜைகளின் உரிமைகள் இன்று கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இத்தகைய ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைத் தடுக்க மக்கள் ஒன்றிணையவேண்டும்- என்றார். (ச-இ)



# வலுசக்தி அமைச்சுக்கு புதிய செயலர் நியமனம்

கொழும்பு,ஏப்.20

வலுசக்தி அமைச்சின் புதிய செயலாளராக ஜி.எம்.ஆர்.டி. அபொன்சு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால், நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளித்தார்.

இலங்கை திட்டமிடல் சேவையின் சிரேஷ்ட அதிகாரியான அபொன்சு, மிகவும் செழுமையான கல்வி மற்றும் தொழில் அனுபவத்தைக் கொண்டவர்.

தேசிய திட்டமிடல், அரச நிதி முகாமைத்துவம், வரிக்கொள்கை மற்றும் பேரண்டப் பொருளாதார முன்னறிவிப்பு ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்.

இவர், ஜனாதிபதி செயலகத்தின் பொருளாதார நிர்வாகப் பிரிவின் பிரதானியாக வும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0872 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 4 1 1 2 0 5 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3138 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 09 32 42 70 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 07 12 29 34 |
| வெற்றி வாரம் | 5299 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0968 |
| வெற்றி இலக்கம் | 11 20 27 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| மேஷம் | |
| வெற்றி இலக்கம் | 06 19 35 38 |
| சீட்டிழுப்பு வாரம் | 4850 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 38 |
| வெற்றி இலக்கம் | 12 19 41 58 |
| வெற்றி வாரம் | 2314 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 19.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 08 24 66 68 |
| வெற்றி வாரம் | 2964 |

# மன்னார் வளைகுடாவில் கரையொதுங்கிய கடல்பசு

மன்னார்,ஏப்.20

மண்டபம் பகுதியை அடுத்துள்ள ஐயன் தோப்பு தெற்கு மன்னார் வளைகுடாக் கடற்கரையில், இறந்த நிலையில் 10 வயது மதிக்கத்தக்க ஆண் கடல் பசுவொன்று கரையொதுங்கியுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன், தனுஷ்கோடி, மண்டபம் ஆகிய தெற்கு மன்னார் வளைகுடா கடற்பகுதியில், மீனவர்களின் வலைகளில் சமீப காலமாக கடல் ஆமை, கடல்பசு டொல்பின் என்பன சிக்குகின்றன. அவற்றை மீனவர்கள் உயிருடன் பத்திரமாக கடலில் விட்டு விடுகின்றனர்.

இந்த நிலையில் நேற்று 10 வயது மதிக்கத்தக்க ஆண் கடல் பசு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. மீனவர்கள் மண்டபம் வனத்துறையினருக்குத் தகவல் வழங்கினர். வனத்துறையினர் இறந்து கரை ஒதுங்கிய கடல் பசுவை ஆய்வு செய்து, உடற்கூறாய்வுக்காக கால்நடை மருத்துவருக்குத் தகவல் தெரிவித்தனர். மருத்துவர் சுமார் 800 கிலோ எடை கொண்ட உயிரிழந்த கடல்பசுவை உடற்கூறாய்வு செய்தார். அதனையடுத்து வனத்துறையினர் இறந்த கடல் பசுவை கடற்கரை மணலில் புதைத்தனர். (க-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மன்னாரில் மணல் மாபியாக்கள் ஏகபோகத்துக்கு முற்றுப்புள்ளி!

## சி.ஐ.டி. விசாரணைக்கு ஆளுநர் உத்தரவு!

**மன்னார், ஏப்.20**

**மன்னார் மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் வழங்கப்பட்ட மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களை உடனடியாக இடைநிறுத்துவதற்கும், அதில் இடம்பெற்றுள்ள மிகப்பெரிய முறைகேடுகள் குறித்துக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளுக்குப் பாரப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார்.**


மன்னார் மாவட்டத்தில் விசேட கூட்டம், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது கடந்த மார்ச் மாதம் 5 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமை தொடர்பில் கடந்த ஏப்ரல் 7ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட கள ஆய்வு தொடர்பான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. இதுதொடர்பில் நீண்ட வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றன.

கூட்டத்தில் உரையாற்றிய ஆளுநர் மற்றும் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, 'டித்வா' இயற்கைப் பேரிடரால் குவிக்கப்பட்ட மணலை அகற்றுதல் என்ற அடிப்படையிலேயே குறித்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும், அவற்றைப் பயன்படுத்தி முறைகேடுகள் நடைபெற்றுள்ளமை அம்பலமாகியுள்ளது. கள ஆய்வின்போது, பல்வேறு இடங்களில் சட்டவிரோத மற்றும் கட்டுப்பாடற்ற மணல் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளமை தெளிவாகக் கண்டறியப்பட்டது. அனுமதிக்கப்பட்ட அளவை மீறி மணல் அகழப்பட்டதுடன், அனுமதி வழங்கப்படாத பகுதிகளிலும்இயந்திரங்களைப் பயன்படுத்தி அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மணல் மாபியாக்களுக்குச் சில அரச அதிகாரிகள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குகின்றனர். ஒரு டிப்பர் மணல் விற்பனையில் சுமார் ஒரு இலட்சம் ரூபா வரை இலாபம் உழைக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்யப்பட்டு முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் - என்றனர்.

அத்துடன்மணல்விநியோகத்தை ஒழுங்குபடுத்தும்முகமாக, மணல் கொண்டு செல்லப்படும் முக்கியமான வீதிகளில் உடனடியாகக் கமராக்கள் பொருத்தப்பட வேண்டும். வளங்களின் இருப்பை உறுதிப்படுத்த ஜி.பி. எஸ். தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவேண்டும். மணல் அகழ்வு மற்றும் சேமிப்பு அனுமதிகள் இனி உள்ளூராட்சி மன்றங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவேண்டும். எந்தவொரு அனுமதியையும் வழங்கும் முன் அனைத்துத் திணைக்களங்களும் இணைந்து ஆய்வு செய்வது கட்டாயமாக்கப்பட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (ச-56.113)

### கடந்தாண்டில்

# சைபர் குற்றங்கள் 10,000 முறைப்பாடுகள்!



கொழும்பு, ஏப்.20

இலங்கையில் கடந்த ஆண்டில் மாத்திரம் 10,000க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 10,015 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இதில் 3,100 முறைப்பாடுகள் நேரடியாகப் பொதுமக்களைத் தொலைபேசி மற்றும் இணையம் வாயிலாகத் தொடர்பு கொண்டு, பல்வேறு போலிக் காரணங்களைக்கூறிப் பணத்தைப் பறித்த சம்பவங்களாகும். சைபர் குற்றவாளிகள் தற்போது பொலிஸ் அதிகாரிகள் என்ற போர்வையில் மக்களை அணுகுவதைத் தங்களது ஆயுதமாகப் பயன்படுத்திவருகின்றனர். உங்களது வங்கிக்கணக்கு அல்லது அலைபேசி இலக்கம் ஏதோ ஒரு சட்டவிரோதச் செயலில் சிக்கியுள்ளதாகக் கூறி பயமுறுத்துகின்றனர். கைதிலிருந்து தப்பிக்கப் பணம் தேவை எனக்கோரி, பாதிக்கப்பட்டவர்களை அவசரகதியில் முடிவெடுக்க வைத்துப் பணத்தைப் பறிக்கின்றனர்.

எனவே வங்கிக்கணக்கு விவரங்கள், OTP எண்கள் அல்லது கடவுச்சொற்களை அறிமுகமில்லாத நபர்களிடம் ஒருபோதும் வழங்காதீர்கள். இதுபோன்ற மிரட்டல்கள் வரும்போது, 011 2175311 அல்லது 0112422176 ஆகிய இலக்கங்கள் ஊடாக கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவைத் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சிகரெட்டுகளுடன் வெளிநாட்டவர் கைது!

கொழும்பு, ஏப்.20

கட்டுநாயக்க விமானநிலையத்தில் 51 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுச் சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# தாழ்தளப் பேருந்துச் சேவை நாளைமுதல் ஆரம்பம்!

கொழும்பு, ஏப்.20

மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்கள் நலன்கருதிய நவீன வசதிகள் கொண்ட தாழ்தளப் பேருந்துச் சேவைநாளை21ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில், மாக்கும்புர பல்தொகுதி போக்குவரத்து மத்திய நிலையத்தில் இந்த ஆரம்ப நிகழ்வு இடம்பெறவுள்ளது. 'கிளீன் சிறீ லங்கா' திட்டத்தின் கீழ், 430.7 மில்லியன் ரூபா செலவில் இந்தப் முன்னோடித்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகிறது. முதற்கட்டமாக 10 நவீன குளிரூட்டப்பட்ட பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

சக்கர நாற்காலியைப் பயன்படுத்தும்மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியவர்கள் எவ்வித சிரமமுமின்றிப் பேருந்தினுள் ஏறி இறங்கும் வகையில் இதன் தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. (ச-இ)




# என்னவோ நடக்குது....!

பூனைக்கு ஆர் மணி கட்டுவினம் எண்டு வெப்பியாரத்தோடும், அப்பிடி மணிகட்டினால் ஓடிவந்து தங்கட மனக்குறையளைக் கொட்டுறதுக்கும் கனபேர் இருக்கினமெண்டது யாழ்ப்பாணத்துப் பெரிய சபை அம்மணியைப் பற்றிச் சொன்னபிறகுதான் வடிவா விளங்குது. அம்மணியில எல்லாரும் கடும் காய்ச்சலில தான் இருக்கினம். காய்ச்சமரம் மட்டுமில்ல மற்றவையைச் சாய்ச்ச மரமும் கல்லடிபடும் போல. பெரியசபை அம்மணி அதிகாரிமார் முதற்கொண்டு உறுப்பினர்மார் வரை எல்லாருக்கும் கடுப்பு வாறமாதிரியான சட்டத்துக்குப் பிழையான காரியங்களில கண்மூடிக்கொண்டு செய்யிறவாம்.

கிட்டடியில பக்கத்து நாட்டுக்காரர், இஞ்சயிருந்து சபையளின்ர தவிசாளர்மாரை தங்கட நாட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோய், பத்துநாள் தங்கவைச்சு, தங்கட நாட்டுக்கு சப்போர்ட் பண்ணுறமாதிரி எல்லாருக்கும் மண்டையைக் கழுவி அனுப்பினவையெல்லோ. அதுக்கு பக்கத்து நாட்டுக்காரர் தனிப்பட்ட முறையில கட்சிசார்பில தான் தவிசாளர்மாரை செலக்ட் பண்ணிக் கூட்டிக்கொண்டு போனவை. அதில பெரியசபை தலையாரி அம்மணியும் ஒராள். இந்தப் பத்துநாள் பயணம் ஏதோ அரசபயணம் எண்டு அம்மணி நினைச்சிருக்கிறா. ஆனால் இதொண்டும் அரசபயணமில்லை, கட்சிரீதியான பயணம் தான் எண்டது அவாவுக்கு கடைசிமட்டும் விளங்கேலை. சிலவேளை ஆளுக்கு இந்த விசயத்திலையும் விளக்கம் குறைவோ தெரியேலை. அவா என்ன செய்திருக்கிறா எண்டா, தான் பக்கத்து நாட்டால எயார் போட்டில வந்து இறங்கேக்க, தன்னை ஏத்துறதுக்கு வாகனம் அனுப்பேலை எண்டு அதிகாரிமாரோட கொளுவுப்பட்டிருக்கிறா. அவா தன்ர பதவி சம்பந்தப்பட்ட வேலைக்காக, அரசபயணமாப் போனால் வாகனத்தை அனுப்பலாம். ஆனால் அம்மணி போனாது கட்சியால தெரிவுசெய்யப்பட்ட ஆக்களுக்கு நடந்த பத்துநாள் பயிற்சிக்கு. அப்ப எப்பிடி அனுப்ப ஏலும்? சிலவேளை வேற போக்குவரத்து வழியொண்டும் அவாக்கு இல்லாட்டி, வாகனத்தை அனுப்பலாம். ஆனால் அதுக்கு முதலே பெர்மிசன் எடுக்கோணும், டீசலும் அவாதான் அடிக்கோணும். இதொண்டும் அம்மணிக்குத் தெரியாதோ இல்லாட்டி தெரிஞ்சும் தெரியாதமாதிரி நடக்கிறாவோ எண்டதுதான் புதிராக் கிடக்கு.

உந்த வாகனக்கதையைச் சொல்லேக்கதான் இன்னொரு விசயமும் நினைவுக்கு வருகுது. இதே அம்மணி தன்ர தனிப்பட்ட தேவைக்காக- ஒரு பேர்த்டே பார்ட்டிக்காக- யாழ்ப்பாணத்தில இருந்து மன்னார் வரைக்கும் பெரிய சபையின்ர வாகனத்தில போய் வந்திருக்கிறாவாம். ஊரா வீட்டு உழுந்தில சுட்ட வடைதானே, எவ்வளவும் சாப்பிடலாம் எண்ட எண்ணம் போல. அதைவிட ஒரு சபையில முக்கியமான பொறுப்பில இருக்கிறவை, தங்கட ஊர்களில இருக்கிற பொது அமைப்புகளில முக்கியமான பதவியளில இருக்கக்கூடாது. ஆனால் அம்மணி அவான்ர ஊரில இருக்கிற 'மன்றம்' ஒண்டில செயலாளரா காசோலையில சைன் வைக்கிற அதிகாரத்தில இருக்கிறா. அந்த மன்றத்துக்கும், பெரியசபைக்கும் இடையில கன வேலைத்திட்டங்கள் தொடர்பா ஒப்பந்தங்களும் போடுப்படுகுது. பகிடி என்னெண்டால் பெரியசபையின்ர சார்பில ஒப்பந்தம் குடுக்கிறதும் அம்மணிதான், மன்றத்தின்ர சார்பில ஒப்பந்தங்களை சைன் வைச்சு வாங்கிறதும் அம்மணிதான். இதெல்லாம் ஊழலில வராதோ? சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அம்மணியின்ர இந்த விசயங்களை ஆராய்ஞ்சு, நடவடிக்கை எடுக்க ஏன் தயங்குகினம் எண்டு பெரிய சபையின்ர உறுப்பினர்மாரும், சனங்களும் கேக்கினம். அவையின்ர கேள்வி சரிதானே?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பிரதேசமட்டத்திலான கரம் போட்டியில் கோப்பாய், நல்லூர் அணிகள் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.20

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களின் கழகங்களுக்கு இடையிலான கரம் போட்டியில், கோப்பாய் மற்றும் நல்லூர்ப் பிரதேச செயலக அணிகள் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தன.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுமதியுடன், யாழ்.மாவட்டச் செயலகத்தின் விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கரம் போட்டிகள், யாழ்.இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. இதில் ஆண்களுக்கான போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தையும், உடுவில் பிரதேச செயலக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றன. பெண்களுக்கான போட்டியில் நல்லூர்ப் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தையும், வேலணைப் பிரதேச செயலக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றன. (க-422)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.20

வலி.வடக்கு ஓய்வூதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் மே மாதம் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணியளவில் தெல்லிப்பழை கூட்டுறவு மருத்துவமனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அங்கத்தவர்கள் பிரேரணைகளை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னதாக திருமதி உ. நாகராசா எட்டாம் கட்டை கே.கே.எஸ். வீதி மல்லாகம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

# அன்னைபூபதியின் நினைவுநாள் கிளிநொச்சியில் கடைப்பிடிப்பு

கிளிநொச்சி,ஏப்.20

மலரும் புதுயுகம் அமையத்தின் ஏற்பாட்டில், தியாகி அன்னைபூபதி நினைவுநாள் மற்றும் பூபதி நினைவாக அறநெறி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி ஈட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மாவட்ட வர்த்தகர் சங்கத்தினர், பிரதேசசபைகளின் உறுப்பினர்கள், மதகுருமார்கள், மலரும் புதுயுகம் அமையத்தின் உறுப்பினர்கள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க)





# பருத்தித்துறை நகரத்தில் தாகசாந்திச் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.20

நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரித்துவரும் நிலையில், பருத்தித்துறை நகரத்தில், பொதுமக்களின் தாகத்தைத் தீர்க்க, தாகசாந்திச் செயற்றிட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் இந்தச் செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளார். இதனூடாக பருத்தித்துறை நகரின் மத்தியில் உள்ள நவீன சந்தைக் கட்டட நுழைவாயிலில் மோர் வழங்கப்படுகின்றது. எதிர்வரும் நாள்களில் தொடர்ச்சியாக பருத்தித்துறை நகரத்தில் பரவலாக மோர் உள்ளிட்ட நீராகாரங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான நிதியுதவியை, பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தினர் உள்ளிட்ட பலர் வழங்க முன்வந்துள்ளனர் என்று தவிசாளர் தெரிவித்துள்ளார். (க-100)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். காரியங்கள் இழுபறியாகமுடியும். தேவையான பணம் இருந்தாலும், எதிர்பாராத செலவுகளால் மனச் சஞ்சலம் உண்டாகும். சகோதரவகையில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** உடல்நலனில் கவனம்செலுத்தவேண்டிய நாள். சகோதரர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நல்லது. சிலருக்குத் திடீர் பணவரவுடன் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** இன்றுகுடும்பத்தில்சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பாதிப்பு இருக்காது. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். தாய்வழியில் திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**கடகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. திடீர்செலவுகளும் ஏற்படக்கூடும். தாய்மாமன்வகையில் நீண்டநாளாக எதிர்பார்த்த உதவி இன்று கிடைக்கக்கூடும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்க அதிகாரிகளால் ஆதாயம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**கன்னி:** உற்சாகமான நாள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர் அல்லது நண்பர்கள்மூலம் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** மனதில் வீண் குழப்பங்கள் தோன்றி மறையும். ஆனால், புதிய முயற்சி சாதகமாகமுடியும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** புதிய முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சகோதரவகையில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகரம்:** உற்சாகமான நாள். முக்கியமான முடிவில் வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். குடும்பத்துடன் கோயில்களுக்குச் சென்று வருவீர்கள்.

**கும்பம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன், சிலர் கடன் வாங்கவும் நேரிடும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# தியாகமும் ஆறாத வடுக்களும்

மட்டக்களப்பு மண்ணில் முப்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு சாதாரணத் தாய் சரித்திர நாயகியாகப் பரிணமித்த அந்தத் தியாகப்பயணம் இப்போதும் ஈழத்தமிழர் வரலாற்றின் ஈரம் காயாத பக்கமாகவே இருக்கின்றது. 1988ஆம் ஆண்டு, மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றலில் இந்திய அமைதி காக்கும் படையினருக்கு எதிராக, 'உடனடிப்போர் நிறுத்தம்' மற்றும் 'புலிகளுடன் பேச்சுவார்த்தை' எனும் இரண்டு கோரிக்கைகளை முன்னிறுத்தி அன்னை பூபதி மேற்கொண்ட 31 நாள்கால உணவுத் தவிர்ப்புப் போராட்டம் என்பது ஒரு தாயின் அறச்சீற்றத்தின் வெளிப்பாடாகும். தனது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகவும், தனது இனத்தின் விடிவுக்காகவும் ஒரு துளி நீரும் அருந்தாமல் அவர் செய்த அந்த உயிர்த்தியாகம், அகிம்சைப் போராட்ட வரலாற்றில் ஒரு உன்னதமான பதிவாகும். நேற்று அவரது 38ஆவது நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்ட வேளையில், அவர் எந்த இனத்தின் விடிவுக்காகவும், எதிர்காலத்துக்காகவும் தனது இன்னுயிரை ஈந்தாரோ, அந்த இனத்தின் அடிப்படைப் பிரச்சினைகள்கூட இன்றும் தமிழர் தாயகத்தில் தீர்க்கப்படாமல் இருப்பதுதான் மிகப்பெரிய துரதிர்ஷ்டமாகும்.

அன்னை பூபதி அன்று இந்திய இராணுவத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகவே களம் இறங்கினார். ஆனால், இன்று நிலைமை என்ன? இந்திய இராணுவம் வெளியேறி பல தசாப்தங்களாகியும், இலங்கை இராணுவத்தின் பிரசன்னமும், நில ஆக்கிரமிப்புகளும் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வை இன்றும் அச்சுறுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வீதிகளில் தவம் கிடப்பதும், அரசியற்கைதிகள் விடுதலையின்றி வாடுவதும், பூர்வீக நிலங்கள் திட்டமிட்டுப் பறிக்கப்படுவதும் அன்னை பூபதியின் ஆன்மா இன்றும் அமைதியடையவில்லை என்பதையே உணர்த்துகின்றன. அந்தத்தாய் அன்று வலியுறுத்திய அதே நீதியும், கௌரவமான வாழ்வும் இன்றும் தமிழ் மக்களுக்குக் கானல் நீராகவே தொடர்கின்றன.

அரசியல் ரீதியாகத் தமிழ் மக்களுக்கான ஒரு நியாயமான தீர்வு எட்டப்படாத வரை, அன்னை பூபதி போன்றவர்களின் தியாகங்கள் வெறும் நினைவேந்தல் நாள்களாக மட்டும் கடந்து செல்லக்கூடாது. அவர் காட்டிய அந்த உறுதியும், தியாக உணர்வும் இன்றைய தலைமுறைக்கும் ஒரு பாடமாக அமையவேண்டும். உரிமைக்காகத் தனது உயிரையே துச்சமெனக் கருதிய ஒரு தாயின் போராட்டத்தை வெறும் உணர்ச்சிவயப்பட்ட நிகழ்வாகப் பார்க்காமல், அதன் பின்னால் உள்ள அரசியல் நியாயங்களை உலகிற்கு உரக்கச் சொல்ல வேண்டிய கடமை நமக்குண்டு. 'அறம் வெல்லும்' என்ற நம்பிக்கையோடு அவர் மரணத்தைத் தழுவினார்; ஆனால் அந்த அறம் இன்னும் தமிழர்களுக்கான விடுதலையையும், நீதியையும் ம்முழுமையாகத் தந்துவிடவில்லை.

அன்னை பூபதியின் நினைவேந்தல் என்பது வெறும் மலர் தூவி அஞ்சலி செலுத்தும் சடங்கல்ல; அது ஒரு இனத்தின் அரசியல் வேட்கையின் மீள் உறுதிப்பாடாகும். ஆட்சியாளர்கள் மாறினாலும், காலங்கள் கடந்தாலும் தமிழர் தாயகத்தில் நீதிக்கான தாகம் இன்னும் தணியவில்லை என்பதை இத்தகைய நினைவேந்தல்கள் பறைசாற்றுகின்றன. எத்தனையோ இழப்புகளையும், தியாகங்களையும் சுமந்து நிற்கும் இந்த இனம், தனக்கான கௌரவமான அரசியல் தீர்வு கிடைக்கும் வரை தனது பயணத்தைத் தொடரும் என்பதற்கு அன்னை பூபதி ஒரு என்றும் அணையாத சுடர். அந்தத் தாயின் தியாகத்திற்கு நாம் செய்யும் உண்மையான கைம்மாறு என்பது, அவர் எதற்காகப் போராடினாரோ அந்த அரசியல் இலக்கை ஜனநாயக வழியில் உறுதிப்படுத்துவதே ஆகும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்

பொருள்: முகத்தால் விரும்பி இனிமையுடன் நோக்கி உள்ளம் கலந்து இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.




# டிஜிற்றல் நூலகமாக மாறிய சுற்றாடல் தகவல் மையம்!

கொழும்பு, ஏப்.20

பாரம்பரிய நூலக முறையிலிருந்து முற்றாக விலகி, நவீன டிஜிற்றல் நூலகக் கருப்பொருளின்கீழ் தேசிய சுற்றாடல் தகவல் மையம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின்கீழ் இயங்கும் இந்த மையம், இலங்கையின் சூழலியல் தரவுகளைத் தொகுத்து வழங்கும் பிரதான மையமாகத் தற்போது மாற்றமடைந்துள்ளது. இலங்கையின் அண்மைக்காலச் சுற்றாடல் ஆய்வுகள், அறிக்கைகள் மற்றும் தரவுகளை ஒரே இடத்தில் டிஜிற்றல் முறையில் பெற்றுக்கொள்ளலாம். உள்ளூர்த் தகவல்களுக்கு மேலதிகமாக, சர்வதேச சுற்றாடல் மாற்றங்கள் மற்றும் உலகளாவிய சூழலியல் கோட்பாடுகள் குறித்த அறிவையும் இந்த மையம் ஒன்றிணைத்துள்ளது.

காலநிலை மாற்றங்கள், இயற்கைவள முகாமைத்துவம் மற்றும் உலகின் புதிய சுற்றாடல் சிந்தனைகள் குறித்தும் அறிந்துகொள்ளலாம். சுற்றாடல் தொடர்பான தகவல்களைப் பெற அல்லது விழிப்புணர்வுத் திட்டங்களில் இணைய விரும்புவோர் 011 2872419, 0112872278, 011 2873447, 0112873448, 011 2888999 எனும் தொலைபேசி எண்கள் மூலம் மையத்தைத் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# மிதிகமவில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஏப்.20

மிதிகம பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. வீடு ஒன்றைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் உயிரிழப்புகள் எவையும் ஏற்படவில்லை. எனினும், வீட்டின் சொத்துகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பாக மிதிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)


# நீரில் மூழ்கி இருவர் பலி

கொழும்பு, ஏப்.20

தம்புத்தேகம பகுதியில் நல்லச்சிய நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளனர். இரண்டு ஆண்களின் சடலங்கள் காணப்படுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. உயிரிழந்தவர்கள் 19 மற்றும் 30 வயதுடைய இளைஞர்கள் எனத் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# வீட்டுக்குத் தீ; தாய், மகள் பலி

மஹரகமவில் உள்ள ஈரடுக்கு வீடொன்றின் மேல் மாடிக்கு இனந்தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டதில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர். அத்துடன் மேலும் இரு ஆண்கள் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மஹரகம பொலிஸார் தெரிவித்தனர். கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், மஹரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ச-இ)



# அதிக கட்டணம் வசூலித்த 80 பேருந்துகள் சிக்கின!

கொழும்பு, ஏப்.20

புத்தாண்டுக் காலத்தில் பயணிகளிடம் அதிகப்படியான கட்டணங்களை அறவிட்ட 80 பேருந்துகளுக்கு அபராதம் விதிக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த 8ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை 680 பேருந்துகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது, பயணிகளிடம் அதிக கட்டணம் வசூலித்த 80 பேருந்துகள் கண்டறியப்பட்டதுடன், மேலதிகமாகப் பெறப்பட்ட பணம் மீண்டும் பயணிகளுக்கே பெற்றுக்கொடுக்கப்பட்டது.

குறித்த பேருந்து நிர்வாகங்களுக்கு அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை** செவ்வாய்க்கிழமை- சித்திரை 08
21.04.2026
சுபநேரம் : 10.31 – 12.01
ராகுகாலம் : 03.01 – 04.31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நிலக்கரி மோசடி விவகாரத்தில் அமைச்சருக்குத் தொடர்பில்லை



## அரசாங்கம் மறுப்பு

**கொழும்பு,ஏப்.20**

**தரமற்ற நிலக்கரி இறக்குமதியில் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் விவகாரத்தில் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என அமைச்சர்களான விஜித ஹேரத் மற்றும் நளிந்த ஜயதிஸ்ஸ திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்கள் இதனை வலியுறுத்தினர். நிலக்கரிக் கொள்வனவு குறித்த உண்மைகளைக் கண்டறிய உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையில், 6 மாத கால அவகாசத்துடன் கூடிய பூரண அதிகாரமிக்க ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஊடக சந்திப்புகளில் குற்றச்சாட்டுகளை அடுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட உறுப்பினர்கள், அடுத்த வாரம் முதல் வரிசையாக ஆணைக்குழுவில் முன்னிலையாகித் தமது ஆதாரங்களைச் சமர்ப்பிக்கலாம். சுயாதீன விசாரணைக்கு இடமளிக்கும் வகையில் வலுசக்தி அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் ஏற்கனவே பதவியில் இருந்து விலகியுள்ளனர். இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தரமற்றது என்பதால் அரசுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதை நாம் பகிரங்கமாகத் தெரிவிப்போம். ஆனால், கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் இதில் அமைச்சரின் தலையீடு இல்லை என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலக்கரி நிறுவனம் தற்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் நேரடிக் கண்காணிப்பில் உள்ளது. ஆணைக்குழுவின் அறிக் கையின் அடிப்படையில் பொதுச் சட்டத்தின் கீழ் தண்டனைகள் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டனர். (ச-இ)



அராலி ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய ஆண்டு விழாவில், மாணவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (க-17)

## சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம்,ஏப்.20

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீர கத்தி விநாயகர் ஆலயத்தில் சித்திரை மாத சதுர்த்தி உற்சவம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு விசேட அபிசேஷகத்துடன் ஆரம்பமாகும்.

•••

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் சித்திரை மாத சதுர்த்தி உற்சவம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடுகளுடன் இடம்பெறும். (க-17)

## குளிர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம்,ஏப்.20

கோப்பாய் கண்ணகை அம்மன் ஆலயத்தில் குளிர்த்தி உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு விசேட பூசை அபிஷேகத்துடன் ஆரம்பமாகும்.

குளிர்த்தியை முன்னிட்டு பொங்கல் பொங்கி மடை பரவும் நிகழ்வும் இடம்பெறும். அத்துடன் குளிர்த்தி உற்சவத்தை முன்னிட்டு கண்ணகை அம்மன் நேற்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு கிராம வலம் வரும் நிகழ்வும் இடம்பெற்றது. (க-17)



அரியாலை 107ஆவது சுதேசியக் கொண்டாட்ட விழாவில் சிறுவர்களுக்கான சங்கீதக் கதிரைப்போட்டி இடம்பெற்றது. (க-17)



### பிள்ளைகளின்

## உயிரைக்காக்கப் போராடிய தந்தை நீரில் மூழ்கிச் சாவு

கொழும்பு,ஏப்.20

மிகிந்தலை, மருதன்குளம குளத்தில் நீராடச் சென்ற இரு சிறுவர்களைக் காப்பாற்றச் சென்ற தந்தை ஒருவர், நீரில் மூழ்கி கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மருதன்குளம பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குளத்தில் நீராடிக்கொண்டிருந்த தனது மகன் மற்றும் மற்றொரு சிறுவன் நீரில் மூழ்குவதைக் கண்டு அவர்களைக் காப்பாற்றுவதற்காக குளத்தில் குதித்தபோது, எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என, விசாரணையில் தெரியவந்துள்ளது. மிகிந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

## லால்காந்த சொத்துகள்; விசாரிக்குமாறு முறைப்பாடு

கொழும்பு,ஏப்.20



விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் லால் காந்தவின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விசாரணை நடத்துமாறு கோரி இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்று அளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவச் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவரால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் கே.டி. லால் காந்த 2024 மற்றும் 2025ஆம் ஆண்டுகளுக்கு அமைவாக கடந்த ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி சமர்ப்பித்த சொத்து விபர அறிக்கை தற்போது சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாகியுள்ளது.

தனக்கு 6.7 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய அசையா சொத்துகள் உள்ளதாக அமைச்சர் தனது சொத்து விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளமையும், ஆனால் சில வருடங்களுக்கு முன்னர் தனது செலவுகளைக்கூட ஈடுகட்டுவது கடினம் என அவர் தெரிவித்திருந்த கருத்தையும் கருத்திற்கொண்டு இந்த முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## மறைந்த நல்லை ஆதீனத்தின் உருவச்சிலை புதனன்று திறப்பு!

யாழ்ப்பாணம்,ஏப்.20

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் முதலாவது குருபூசை நிகழ்வு நாளைமறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்று தொடர்ந்து காலை 9 மணிக்கு சுவாமிகளின் உருவச்சிலை திறந்து வைக்கப்படும். ஆதீன பிரதம சிவாச்சாரியார் பண்டிதர் சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள், தென்கயிலை ஆதீனம் (திருகோணமலை) குருமுதல்வர் தவத்திரு அகத்திய அடிகளார், சுப்பிரமணிய கோட்டம் (கோப்பாய்) முதல்வர் ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் சிவகுரு ஆதீனம் (நல்லூர்) முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் வேதாந்த மடம் (கந்தர்மடம்) முதல்வர் சிவத்திரு வேதவியாசர் சின்மயமிஷன் (கிளிநொச்சி) முதல்வர் சிவேந்திர சைத்தன்யர் ஆகியோர் பிரார்த்தனை உரையை நிகழ்த்தவுள்ளனர்

ஆதீன அறக்கட்டளை உறுப்பினர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா வரவேற்புரையையும் ஆதீன அறக்கட்டளைச் செயலாளர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையுரையையும் இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் சிறப்புரையையும் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் தி. வேல்நம்பி ஆகியோர் வாழ்த்துரையையும் வழங்கவுள்ளனர் (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒரே கட்டமைப்பின் கீழ் வடக்கு - கிழக்கு அழககங்கள்!

## சம்மேளனத்தால் புதிய வியூகம்!

**யாழ்ப்பாணம்,ஏப்.20**

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள அழககச் சம்மேளனங்களை ஒன்றிணைத்து, ஒரு வலுவான கட்டமைப்பின் கீழ் இயங்கத் திட்டமிட்டுள்ளதாக வடக்கு மாகாண அழககக் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் ஆனந்தராசா உதயசாங்கர் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், சிகையலங்காரத் தொழிலை எவரும் முறைப்படி அனுமதி பெற்றுச் செய்யலாம். பாடசாலை மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் சிகையலங்கார முறையைக் கண்காணிக்கும் வகையில் ஒரு புதிய பொறிமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு விசேட அட்டை வழங்கப்படும். மாணவர்கள் சிகையலங்காரம் செய்தவுடன், அந்த அழககத்தில் அட்டையில் திகதி மற்றும் விவரங்களைப் பதிவுசெய்யவேண்டும். மாணவர்கள் எங்கு, எத்தகைய சிகையலங்காரம் செய்தார்கள் என்பதைப் பாடசாலை நிர்வாகம் இந்த அட்டையின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

அத்துடன் எதிர்காலத்தில் மாணவர்களுக்கு எவ்வாறு சிகை அலங்காரம் செய்யவேண்டும் என்ற ஒரு மாதிரிப்படத்தை முன்மொழிந்து, அதற்கு அமைவாக சிகை அலங்காரம் செய்யும் மாணவர்களுக்கு மாத்திரம் 350 ரூபா சலுகைக் கட்டணம் அறவிடப்படும். சிகையலங்காரத் தொழிலாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் நடைமுறையிலுள்ள பொது விடுமுறை கட்டாயமாகத் தொடரும். மின்சாரக் கட்டணம் மற்றும் உபகரணங்களின் விலையேற்றத்தைக் கருத்திற்கொண்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டணத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் - என்றார். (ச-இ)

## ஞாயிறு கட்டாய விடுமுறை பருத்தித்துறையில் நடைமுறை

யாழ்ப்பாணம்,ஏப்.20

சித்திரைப் புத்தாண்டுக் காலப்பகுதியை முன்னிட்டு, கடந்த இரண்டு வாரங்களாக ஞாயிற்றுக்கிழமைகளிலும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள வழங்கப்பட்ட விசேட அனுமதிநிறைவடைந்துள்ளது. மீண்டும் ஞாயிறு கட்டாய விடுமுறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் ந. திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை மீறிச் செயற்படும் வர்த்தகர்களுக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதேவேளை அத்தியாவசியச் சேவைகளைக் கருத்திற்கொண்டு மருந்தகங்கள், உணவகங்கள் மற்றும் தேநீர்க் கடைகள், வெதுப்பகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் பழக்கடைகள் என்பவற்றை ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-100)





திருக்கோணேஸ்வரம் அருள்மிகு மாதுமை அம்பாள் உடனுறை கோணேஸ்வரப் பெருமானின் வருடாந்த பங்குனி உத்தர பிரம்மோற்சவத்தின் பஞ்சரத இரதோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச)

## வீடுகள் மீது தாக்குதல்: சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.20

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடுப் பகுதியில் நான்கு வீடுகள் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில், சந்தேகநபர் ஒருவர் மருதங்கேணிப் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 15ஆம் திகதியன்று, குறித்த வீடுகள் மீது சரமாரியான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்த நபர், வீட்டின் உடைமைகள் கண்ணாடி மற்றும் தளபாடங்களை அடித்துச் சேதப்படுத்தியுள்ளார்.

மேலதிகவிசாரணைகளைமேற்கொண்ட மருதங்கேணி பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளனர். (க-66)

## 15 கொலைக் குற்றச்சாட்டுகள் 'கரந்தெனிய ராஜு' சிக்கினார்



இலங்கையில் 15க்கும் மேற்பட்ட கொலைகள் மற்றும் பல்வேறு குற்றச்செயல்களுக்காக பொலிஸாரால் நீண்டகாலமாகத் தேடப்பட்டு வந்த கரந்தெனிய ராஜு, குற்றப் புலனாய்வுத் திணைக்கள தின் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டார். பிரபல பாதாள உலகக் கும்பல் தலைவனான 'கரந்தெனிய சுத்தா' என்பவரின் சகோதரனான இவருக்கு சர்வதேச பொலிஸ் துறையால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், அண்மையில் இந்தியாவில் வைத்து அந்த நாட்டுப் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடம் போதைப்பொருள் கடத்தல் மற்றும் வெளிநாடுகளில் இருந்து இயங்கும் பாதாள உலக வலையமைப்பு குறித்துக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

## தாய் கொலை மகன் கைது!

கொழும்பு,ஏப்.20

பணத்தகராறு காரணமாக தனது தாயை அடித்துக் கொலைசெய்த குற்றச்சாட்டில் 20 வயதுடைய இளைஞர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி 04, சந்தைக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 40 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மகன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்திவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)






பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட கலாசார அலுவல்கள் அலகின் வருடாந்த கலாசார ஊக்குவிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் கிராமிய நடனப் பயிலரங்கு பச்சிலைப்பள்ளி நாட்டிய ஷேஸ்ரா கலைமன்றத்தில் அண்மையில் இடம்பெற்றது. வளவாளராக விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய நடன ஆசிரியர் திருமதி சங்கீதா மதுரன் கலந்து கொண்டார். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் நாகநாதன் சச்சிதானந்தம் (கிளியர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள்
நாளை (21.04.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00
மணியளவில் அவரது இல்லத்தில்
நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து
நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

**1ம், கட்டை,**
**கல்வயல்,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்**

(cs.61262) (N-1)

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்**

பெறுகை அறிவித்தல்

வெளிவாரி அடிப்படையிலான பாதுகாப்புச்சேவை வழங்கலுக்கான

விலைமனுக் கோரல் **2026 / 2027**

தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் அவர்கள் 2026 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவை, வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இல | சேவை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(16)/01/OS/01/2026 | பாதுகாப்புச் சேவை | 06 |

1. சேவை வழங்குநர்கள் பாதுகாப்புச் சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 2 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்கள் பெறுகை ஆவணங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாயில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 20.04.2025 ஆம் திகதி தொடக்கம் 04.05.2026 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 03.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 2000.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4. பெறுகை ஆவணங்கள் 05.05.2026 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

**20.04.2026**

(cr.47414) (N-1)

# நெஞ்சகலா இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



**கைதடி கிழக்கைச் சேர்ந்த**

## அமரர்

## வேலுப்பிள்ளை விசுவநாதர்

(முன்னாள் பிரதேச சபை ஊழியர் - சாவகச்சேரி,
உரிமையாளர் - சுமித்திரன் ஸ்ரோர்ஸ், கிருஷ்யா பல்பொருள் அங்காடி)

**தோற்றம்**
**13.05.1947**

**மறைவு**
**11.05.2024**

எண்மூன்று திங்கள் கடந்தபோதும் - உம்
நினைவுகள் நித்தம் நெஞ்சினில் மோதும்
அப்பா நீங்கள் செப்பிய வார்த்தைகள் - என்றும்
ஆயுள் குன்றாமல் செவிகளில் வாழும்
கற்றுத் தந்த வாழ்க்கைப் பாடத்தை
பற்றிப் பணியாற்றி நடக்கின்றோம் நாளும்.

சிரமத்தில் செய்வதறியாது இருந்த நேரத்தில்
சிரித்த முகத்தோடு தோள் தந்தீர்
ஊருக்கும் உறவுக்கும் உற்றோருக்கும்
மற்றோருக்கும் வழிகாட்டியாய் வந்தீர்

நீக்கமற நின்றிருந்தோம் உங்கள் நிழலில்
சிக்கித் தவிக்கின்றோம் காலச் சுழலில்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்**
**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்**
**அன்பு மனைவி,**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரி**
**மற்றும் உறவினர்கள்**

(cs.47425) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வேகத்தால் விபத்து மூவர் படுகாயம்

முல்லைத்தீவு, ஏப்.20

முள்ளிவளை வித்தியானந்தக் கல்லூருக்கு முன்பாக நேற்று மாலை நடந்த விபத்தில் முதியவர் ஒருவர் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

தண்ணீரூற்றுப் பகுதியில் இருந்து முள்ளியவளை நோக்கி சைக்கிளில் பயணித்த முதியவரை, அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து நடந்துள்ளது. சைக்கிளில் பயணித்த முதியவரும், மோட்டார்சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் விபத்தில் படுகாயமடைந்துள்ளனர். இளைஞர்கள் ஆபத்தான முறையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தனர் என்றும், விபத்தை அடுத்து மோட்டார் சைக்கிளிள் வீதியோர வாய்க்காலுக்குள் தூக்கி வீசப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. விபத்தில் படுகாயமடைந்தவர்களை வீதியால் பயணித்தவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-19)

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 04 . 1937



மறைவு 16 . 04 . 2026

### நவரத்தினம் நாகம்மா

சண்டிலிப்பாய் வடக்கு மாகியப்பிட்டியை பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் நாகம்மா கடந்த 16.04.2026 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவக்கொழுந்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற நவரத்தினத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிந்தாமணி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான இராசமணி, முத்தையா, சின்னம்மா மற்றும் வேலாயுதம் பொன்னம்மா (கனடா), செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நிர்மலதேவன் (ஜேர்மனி), பூபாலசிங்கம், ஜீவமதி மற்றும் தர்மபாலன் (கனடா), காந்திமலர், பானுமதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சச்சிதானந்தன், சிவகுமார், லலிதா ஆகியோரின் மாமியும், கிசோந், கியோசி, சிவக்ஷன், சிபூஷன், சிதுஷன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.04.2026) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்தில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 036 3418
077 557 2393

383/ 20, நாவலர் லேன்,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(cs.61251) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 12 . 1961



மறைவு 14 . 04 . 2026

### தனரஞ்சினி சண்முகநாதன்

(முன்னாள் ஆசிரியர்)

வட்டுத் தெற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட தனரஞ்சினி சண்முகநாதன் அவர்கள் கடந்த (2026.04.14) செவ்வாய்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் - தவநாயகி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா- தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், சண்முகநாதனின் அன்பு மனைவியும், சஜந்தன் (பொறியியலாளர்), ஹரிக்ஷன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிறேமலதா, காலஞ்சென்றவர்களான செல்வறதி, குகசீலன் மற்றும் குகதாஸ், ஜெனனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவசுப்பிரமணியம், பாக்கியலக்ஷ்மி, கதிர்காமராசா, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, சோமசுந்தரம், கணேசராஜா, சுதர்சன், கிரிதரன், நிலாந்தி, ஸ்ரீரங்கன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2026.04.22) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் ஜேர்மனியில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
குடும்பத்தினர்
021 222 7824

(cs.) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 07 . 1942



மறைவு 18 . 04 . 2026

### இரத்தினசிங்கம் மாணிக்கத்தியாகநாதன்

(இளைப்பாறிய எழுதுவினைஞர் - வலி கிழக்கு பிரதேச சபை)

கந்தர்மடத்தினை பிறப்பிடமாகவும் ஈவினை புன்னாலைக்கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் மாணிக்கத்தியாகநாதன் கடந்த 18.04.2026 சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், சுஜந்தா (பிரதேசசெயலகம் உடுவில்), சசிகரன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீசன் (சட்டத்தரணி), சுஜானி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷாய்ஷாந், ஹாசினி, ஷான்டர் முருகன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும், பத்மநாதன், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், பரமேஸ்வரநாதன் மற்றும் கதிர்காமநாதன் (இளைப்பாறிய பல் வைத்தியர்), கணேஸ்வரநாதன், காலஞ்சென்றவர்களான தமயந்தி, தங்கேஸ்வரி, கணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.04.2026) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈவினை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
ச. சுஜந்தா (மகள்)
சதீசன் (மருமகன்)
[illegible]

ஈவினை மத்தி,
புன்னாலைக்கட்டுவன்.

(cs.61263) N-1

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 10 . 05 . 1941



இறப்பு 30 . 04 . 2025

யாழ். உரும்பிராய் கிழக்கு உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

### அமரர் சிவகுரு கதிரவேலு

(ஓய்வுபெற்ற அதிபர் பதுளை டிக்வெல தமிழ் வித்தியாலயம், ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்)

கண்ணில் அழுகை ஓயவில்லை
எம் கனவு வாழ்க்கை புரியவில்லை
விழிகள் உங்களை தேடுகையில்
விழிநீர் ஆறாய் ஓடுகிறதே!

பறி கொடுத்து விட்டாலும் உங்கள்
பாசத்தைப் பறித்துவிட எத்தனை
ஜென்மம் வேண்டும் அவனுக்கு!


நீங்கள் எங்களுக்கு வழங்கிய பாச
உறவு என்றும் பிரியாது அப்பா!!!

துணை எங்களுக்கு யாரென்று
துவண்டிடும் வேளையில்
நீங்கள் என்றென்றும் எங்களை
நல்வழியில் நடத்துவீர்கள்
என்கின்ற துணிவிலேயே
வாழ்கின்றோம் அப்பா!!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

என்றும் உங்களின் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்னை பூபதிக்கு முல்லையில் அஞ்சலி

முல்லைத்தீவு,ஏப்.20

இந்திய இராணுவத்தின் அடக்குமுறைக்கு எதிராக சாகும்வரை உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த தியாகத்தாய் அன்னை பூபதியின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனது மக்கள் தொடர்பகத்தில் நேற்று உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கு சுடரேற்றி, மலர்மாலை அணிவித்து, மலர்தூவி உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் மகாதேவா குணசிங்கராசா, சமூகச் செயற்பாட்டாளர் கிருஸ்ண பிள்ளை சிவகுரு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (க-246)

## கீரிமலை...

கேணியில் இருந்து கீரிமலை கடலில் நீராடச் சென்றுள்ளார். பிற்பகல் 2 மணியளவில் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார். பிற்பகல் 4 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-26)

## ஆடைகளற்ற...

நேற்றுமுன்தினம் இரவு மாடு மேய்க்கச் சென்றவர்கள் வழங்கிய தகவலுக்கு அமைய, குமரபுரம் கிராம அலுவலர் கிளிநொச்சி தலைமைப் பொலிஸ் நிலையத்துக்கு சுட்டத்தீவு கோயிலுக்கு அருகில் வனப்பகுதியில் சடலம் ஒன்று காணப்படுகின்றது என்று தகவல் வழங்கினார். பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்தனர்.

நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் பொன்னுத்துரை கிருசாந்தன் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை பார்வையிட்டு உடற்கூற்று பரிசோதனைகளை மேற்கொள்ளவும், அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் உத்தரவிட்டார். சடலம் மிகவும் சிதைவடைந்த நிலையில் காணப்படுவதால், சடலத்தை அடையாளம் காண முடியவில்லை. சடலம் ஆடைகளற்றுக் காணப்பட்டது என்றும், அந்தப் பிரதேசத்தில் வேறு தடயப் பொருள்கள் எவையும் மீட்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-எ-113-55)

## எதிர்வரும்...

பதற்கு வாய்ப்புள்ளது என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களின் சில பகுதிகளுக்கு சற்றுக் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஆனால், மழை கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் அதிக வெப்பநிலையுடனான வானிலை தொடரும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதியும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர். நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். அதிக வெப்பநிலை காரணமாக மேற்காவுகைச் செயற்பாட்டுக்கான அடிப்படைகள் உருவாகியுள்ளன. நீராவியின் மேலுயர்த்துகையும் , கீழ் மாறன் மண்டலத்தின் மேல் பகுதியில் நிகழும் வளிக் குளிரடைதல் செயற்பாடும் மழையைத் தோற்றுவிக்கும்.

கடந்த பல நாள்களாக மிக அதிகமான வெப்பநிலையால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வடக்கு, கிழக்கு, வடமேற்கு, வட மத்திய, மற்றும் மேற்கு மாகாணங்களுக்கு இந்த மழை ஆறுதலாக அமையும். தரவுகளின் அடிப்படையில் உண்மையான மற்றும் உணரக்கூடிய வெப்பநிலை அடிப்படையில் இந்த ஏப்ரல் மாதமே அதிக அளவிலான வெப்பநிலை நிலவும் மாதமாகப் பதிவாகியுள்ளது. கடந்த 19 நாள்களில் வடக்கின் அளவிடப்பட்ட வெப்பநிலை சராசரியாக 36.3 பாகை செல்சியஸாகப் பதிவாகியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் 36.5 பாகை செல்சியஸாகப் பதிவாகியுள்ளது என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-66)

**நல்லூர் கந்தன் திருமண சேவை**

எல்லோருக்கும் அக்சய திருதியை நல்வாழ்த்துக்கள்

எமது திருமண சேவையில் எல்லோருக்கும் ஏற்றவாறு மணமகன்கள் மணமகள்களும் எல்லா தொழில் துறையிலும் Non RC, RC லும் மணமக்கள் உண்டு.

தொடர்பு: வி.ஜெயந்தி

T.P: 077 97 33 183

(CS 31636)A

**மணமகள் தேவை**

யாழ் இந்து ( V ) 1978, கேட்டை நட்சத்திரம் 11, சூரியன், செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.


தொடர்புகளுக்கு:

071 034 1114

(CS 31634) A

## மரண அறிவித்தல்

| ஈன்றவள் மடியில் | ஈசன் அடியில் |
| --- | --- |
| 02 | 19 |
| 01 | 04 |
| 1948 | 2026 |



### திரு.முத்துராஜா புஷ்பராஜலிங்கம்

(நீர்ப்பாசன வெளிக்களக உத்தியோகத்தர் - ஒட்டிசுட்டான்)

ஏழாலை மேற்கை பிறப்பிடமாகவும் இல .780, புளூமென்டல் வீதி, கொழும்பு-15 ஐ வசிப்பிடமாகவும் கொண்டிருந்த முத்துராஜா புஷ்பராஜலிங்கம் அவர்கள் 19.04.2026 ஞாயிற்றுக்கிழமையன்று அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துராஜா - பாக்கியம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் திருநெல்வேலி கிழக்கை சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்துரை - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கமலாதேவி அவர்களின் பாசமிகு கணவரும் ஷாரகா (கனடா), மதிகரன் (மலேசியா), கௌசியா , கம்ஷா (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜங்கரசுதன் (கனடா), டியானா (மலேசியா), குமரன் , தவதீஸ் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் தேனுஜா , ஆதி (கனடா), டர்விஷ் , டர்வின் (மலேசியா), ஹாஷினி , திவியன் , ஸாத்விகன் , விஷாலி (கொழும்பு) ஆகியோரின் தாத்தாவும் காலஞ்சென்ற சக்திவேல் (கனடா), கனகலிங்கம் (ஜேர்மனி), புவிராஜசிங்கம் (கனடா), காலஞ்சென்ற திருச்செல்வம் , சிவஞானசிங்கம் (இணுவில்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற சிவனேசன் , இலட்சுமி காந்தன் (கிராம உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் புதவுடல் இல. 780, புளூமென்டல் வீதி, கொழும்பு-15 இல் (NO.780, Bloemendhal Road, Colombo-15) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 21.04.2026 செவ்வாய்க்கிழமை மதியம் 3 மணியளவில் மாதம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : ம.குமரன் - 077 2947104 / க.தவதீஸ் - 077 7679367

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 29 | 19 |
| 11 | 04 |
| 1938 | 2026 |



### திரு.கந்தையா பரமானந்தன்

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தையா பரமானந்தன் நேற்று (19.04.2026) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்தம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதிதேவியின் ஆருயிர் கணவனும், பிரபாலினி (கனடா), பிரதீபன் (இ.போ.ச. யாழ்ப்பாணம்), சாமினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரியாந்தன் (கனடா), நரேந்தினி (ஆசிரியை - யா/சண்டிலிப்பாய் G.T.M.S.), சுதாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற கனகேஸ்வரி மற்றும் தையல்நாயகி, இராஜேஸ்வரி, வள்ளிநாயகி, பேரானந்தன், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நேருஜா, பிரபஜன் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சண்டிலிப்பாய் கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆவனை வீதி,
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 987 4540

(CS 31635 )A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ரஷ்ய...

எரிசக்தி தொடர்பில் ரஷ்யாவுடன் நீண்ட கால ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள அரசாங்கம் எடுத்து வரும் தீவிர முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்தப் பயணம் உள்ளது.

ரஷ்யா மீதான சர்வதேச தடைகள் இந்த ஒப்பந்த முயற்சியில் பெரும் தடைக்கல்லாக இருக்கின்றது. அமெரிக்கா தலைமையிலான நாடுகள் ரஷ்யா மீது விதித்துள்ள தடைகள் தற்போது ஒரு மாத காலத்துக்கே தற்காலிகமாகத் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், ரஷ்யாவுடன் நீண்டகால ஒப்பந்தங்களில் ஈடுபடுவது இலங்கைக்குப் பெரும் இராஜதந்திரச் சிக்கல்களை உருவாக்கவும் கூடும். சர்வதேசத் தடைகளின் தற்போதைய நிலவரங்களைக் கருத்திற்கொண்டு, நாட்டின் நலனுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நிலக்கரி மற்றும் எரிபொருள் விநியோகம் தொடர்பான இறுதி முடிவுகள் அமைச்சர் விஜித ஹேரத்தின் பயணத்தில் எடுக்கப்படலாம் என்று அரசாங்கத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த எரிசக்தி ஒப்பந்தங்களுக்குப் பதிலாக இலங்கையில் அணுமின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான கோரிக்கையை ரஷ்யா முன்வைத்துள்ளது. சர்வதேச அணுசக்தி நிறுவனம் ஏற்கனவே இலங்கையில் அணுமின் நிலையத்திற்கான சாத்தியமான ஐந்து இடங்களை அடையாளம் கண்டுள்ளது என்று தெரிவித்திருந்தாலும், தற்போதைய அரசாங்கம் ரஷ்யாவின் இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தற்போது ஒரு நுணுக்கமான இராஜதந்திர சூழலில் உள்ளது. ஒருபுறம் ஈரானியத் தூதுவரின் எரிபொருள் வழங்கல் வாய்ப்பை நிராகரித்துவிட்டு, அமெரிக்கா மற்றும் நைஜீரியாவிடம் இருந்து எண்ணெய் பெறப் போவதாக அறிவித்திருந்தது. ஆனால் அமெரிக்க நிறுவனங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் இதுவரை எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது தெரிகிறது. இத்தகைய பின்னணியில், அமைச்சர் விஜித ஹேரத் பெலாரஸ் நாட்டுக்கான பயணத்தின் ஒரு பகுதியாக ரஷ்யாவுக்கும் சென்று மேற்கொள்ளவுள்ள பேச்சுவார்த்தைகள், இலங்கையின் எரிபொருள் மற்றும் நிலக்கரித் தேவையைப் பூர்த்தி செய்து மின்சார நெருக்கடியைத் தீர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ-எ-இ)

## ஓட்டோ...

துள்ளது. விபத்தில் காயமடைந்த குழந்தை மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தது என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-56)

## தமிழரசு...

பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழின நலன்கருதியும், கட்சி நலன் கருதியும் அன்புரிமையுடன் வேண்டிக் கொள்கின்றேன் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழு மற்றும் அரசியல் குழு உறுப்பினர்களுக்கு அவர் அனுப்பியுள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பம் முதல் கட்சியைப் பிளவுபடுத்தி அழித்துவிடும் முயற்சிகள் தொடர்ந்தாலும், அவற்றை ஒற்றுமையாக எதிர்கொண்டு வெற்றி கண்டுள்ளோம். தமிழர்களின் இனத்துவ மற்றும் நிலத்துவ உணர்வுகளை தளர்வின்றி முன்னெடுக்கும் தனித்துவமான ஒரேயொரு கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சியே என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தென்னிலங்கை இனவாத அரசியலை எதிர்த்து தமிழின காப்பரணாக இருக்கும் எமது கட்சியை உடைத்து சிதைத்து அழித்துவிட பலமான ஊடுருவல்கள் நடப்பதை நாம் பார்க்கின்றோம். நாம் ஒற்றுமையாக செயற்பட வேண்டிய நேரம் இது என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் அறிவீர்கள்.

அண்மைக் காலமாக எமது கட்சியின் உள்விவகாரங்கள் பொது வெளியில் பேசப்பட்டு வருவது நமது எதிரிகளுக்கு வாய்ப்பளிப்பதை நீங்கள் உணராதவர்கள் அல்ல என்பதை நான் அறிவேன். எமது கட்சிக்குள் இருக்கக் கூடிய கருத்து வேறுபாடுகளை பொது வெளியில் பேசுவதை தவிர்ப்போம் என்ற திடசங்கற்பத்தை எடுக்க வேண்டும் என கட்சி நலன் கருதியும் தமிழின நலன் கருதியும் அன்புரிமையுடன் வேண்டிக் கொள்கிறேன் என்று அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-26)

## அன்னை...

அடக்குமுறைக்கு எதிராக 31 நாள்கள் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு, அன்னை பூபதி உயிர்நீத்தார்.

1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கு முன்பாகத் தனது போராட்டத்தை ஆரம்பித்த அன்னை பூபதி, 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி உயிர்நீத்தார்.

பிரதான நினைவேந்தல் மட்டக்களப்பு நாவலடியில் உள்ள அவரது நினைவுத் தூபிக்கு அருகே நடைபெற்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், புலம்பெயர் நாடுகளிலும் பல்வேறு இடங்களில் நேற்று அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டன. (அ-எ-இ)

## வீடுடைத்து...

ரஞ்சாட்டப்பட்டுள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி நிகழ்ந்த சம்பவத்தைத் தொடர்ந்து உடனடியாக கொடிகாமம் பொலிஸார் சந்தேகநபரை கைது செய்ததோடு தங்க நகைகளையும் 2 இலட்சம் ரூபா பணத்தையும் மீட்டனர்.

சாவகச்சேரி நீதிமன்றில் மறுநாள் முற்படுத்தப்பட்ட எதிரி குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து 5 இலட்சம் ரூபா பெறுமதியான இருவரின் ஆள்பிணையில் தண்டனை தீர்ப்பு வழங்கப்படும் வரையில் அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில் கைவிரல் அடையாள அறிக்கைக்கும் தண்டனை தீர்ப்புக்குமாக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் கடந்த 19ஆம் திகதி வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிக்கு சிறைத்தண்டனை வழங்காமல் கருணைகாட்ட வேண்டும் என்று அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீண்டசமர்ப்பணங்களை முன்வைத்தார். முறைப்பாட்டுக் காரர் பெண்மணியின் உறவினரான எதிரி குடும்பத்தில் ஒருவராக பழகியவர் என்றும் கொடுக்கல் - வாங்கல்களில் ஏற்பட்ட மனக்கசப்பின் விளைவாக திடீரென உணர்ச்சிவசப்பட்டு நகைகளை அபகரித்துச் சென்று விட்டார் என்றும் சட்டத்தரணி குறிப்பிட்டார். அத்துடன் சில புகைப்படங்களும் ஆவணங்களும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் எதிரிக்கு முற்குற்றம் கிடையாது என்றும் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

எதிரி தரப்பின்வாதங்களை கடுமையாக மறுத்துரைத்த முறைப்பாட்டாளரின் சார்பிலான சட்டத்தரணி என்.சிறீகாந்தா இது நன்கு திட்டமிடப்பட்ட குற்றச்சம்பவம் என்றும் நகைகள் வீடுடைத்து களவாடப்பட்டமை மிகவும் பாரதூரமானது என்றும் தெரிவித்தார். எதிரிக்கு சட்டத்தின் கீழ் உச்சபட்ச சிறைத்தண்டனை வழங்கப்படவேண்டும் என்று கூறியதுடன், யாழ். மாவட்டத்தில் குற்றங்கள் பெருகி வருவதையும் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் தண்டனைத் தீர்ப்புக்காக வழக்கு நாளை செவ்வாய்க் கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-எ-26)

## பாடசாலைகள்...

திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

புத்தாண்டு விடுமுறையின் பின்னர் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் வழமை போன்று இன்று முதல் இடம்பெறும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. சிங்கள மற்றும் தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கான 2026ஆம் ஆண்டுக்கான இரண்டாம் தவணையின் முதலாம் கட்டம் இன்று ஆரம்பமாகிறது. முஸ்லிம் பாடசாலைகளின் 2026ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணையின் நான்காம் கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன. (அ-எ-இ)

## ஆற்று...

இளைஞனே உயிரிழந்தவராவார். சடலம் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு கேப்பாபிலவு வீதியில் கள்ளியடி பகுதியில் போரற்றை மறித்து ஆறு இடங்களில் உலக வங்கியின் நிதி உதவியுடன் அணைக்கட்டு கட்டப்பட்டு நெற்செய்கைக்கு நீர் வழங்கப்படுகின்றது. தற்போது இந்த அணை கட்டுக்கள் அடைக்கப்பட்டு நீர் தேக்கப்பட்டுள்ள நிலையில், இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது நிலவும் வெப்பமான கால நிலையால் நீர் நிலைகளில் பலர் நீராடுகின்றனர். எச்சரிக்கைகளைக் கருத்தில் கொள்ளாது செயற்படுவதால் நீரில் மூழ்கி உயிரிழக்கும் சம்பவங்கள் அண்மைய நாள்களில் அதிகரித்துள்ளன. (அ-எ-19)

## கூட்டாட்சி...

பேரவை சார்பாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் கலந்து கொண்டு, இந்தியாவின் துணை ஜனாதிபதியிடம் கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றைக் கையளித்தார். அந்த மனுவிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி ஆட்சி முறைமைக்குச் சிறிலங்காவின் ஒற்றையாட்சி முறைமை மாற்றப்படாத வரை தமிழ்த் தேசத்துடைய தனித்துவத்தையும், அடையாளத்தையும், ஒற்றையாட்சி முறைக்குள் பாதுகாக்கவே முடியாது என்பதே வரலாற்று அனுபவமாகும்.

இந்திய மத்திய அரசாங்கம் சிறிலங்கா அரசாங்கம் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து ஏக்கிய இராச்சிய அரசியல் யாப்பு நிறைவேற்றப்படுவதை தடுத்து நிறுத்தவும், சிறீலங்காவின் ஒற்றையாட்சி முறைமையை நீக்கவும், தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வாகப் புதிய அரசியல் அமைப்பில் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட, தமிழ்த் தேசத்தின் தனித்துவமான இறைமையின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய கூட்டாட்சி முறைமை உருவாக்கப்படுவதனை உறுதிப்படுத்தவும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இந்திய அரசிடம் தமிழ்த்தேசியப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

பொருளாதார ரீதியாக வீழ்ந்துள்ள சிறிலங்காவை மீளவும் கட்டியெழுப்புவதற்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியமானதாகும். இந்தியாவின் பங்களிப்பின்றிச் சிறிலங்கா வளர்ச்சியடைய முடியாது என்பதுடன் தமிழகத்தோடு பொருளாதார ரீதியில் நெருக்கமான உறவையும், தொடர்பாடலையும் உருவாக்காமல் சிறிலங்காவின் பொருளாதார வளர்ச்சியென்பது சவாலாகவே இருக்கும். இந்தப் பின்னணியில் சிறிலங்காவின் மீது கணிசமான அழுத்தத்தை ஏற்படுத்தித் தமிழர்கள் விரும்பும் மேற்படி தீர்வை இந்தியாவால் சாத்தியமாக்க முடியுமென நம்புகின்றோம் என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ-66)

## இந்தியத்துணை...

பயணம் மேற்கொண்டு நேற்று இலங்கை வந்தடைந்தார். அவருடன் 49 பேர் கொண்ட உயர்மட்டத் தூதுக்குழுவினரும் வந்துள்ளனர்.

அவர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோருடன் முக்கியமான இருதரப்பு பேச்சுகளை நடத்தவுள்ளார்.

பிரதானமாக டித்வா பேரிடரின் பின்னரான சீரமைப்புப் பணிகள் மற்றும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அவரது இந்தப் பயணத்தின்போது கையெழுத்திடப்படவுள்ளன என்றும், அவர் பல்வேறு அரசியல் மற்றும் சமூகத் தலைவர்களையும் நேரில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## உழவியந்திரம்...

செலுத்திச் சென்றபோது கட்டுப்பாட்டை இழந்த உழவியந்திரம் தடம்புரண்டுள்ளது. உழவியந்திரத்தைச் செலுத்திச் சென்ற 29 வயதான இளம் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச்சம்பவம்தொடர்பில்புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-110)

## ஆட்பதிவு...

திணைக்களத்தின் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த நிலையில், இன்று முதல் சேவைகள் வழமை போன்று நடைபெறும் என்று ஆள்பதிவு திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசின் பொருளாதார அறிவின்மையால் சர்வதேசச் சந்தையில் களங்கம்

## ஹர்ஷ டி சில்வா சாடல்!



**கொழும்பு,ஏப்.20**

**மசகு எண்ணெயின் விலை தொடர்பான சர்வதேச வங்கியொன்றின் பகுப்பாய்வைத் தவறாகப் புரிந்துகொண்டு, அந்த வங்கிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முனைவது இலங்கையின் பொருளாதார அறிவின்மையையே காட்டுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தின் இத்தகைய முதிர்ச்சியற்ற போக்கு, சர்வதேச நிதிச் சந்தையில் இலங்கையின் நற்பெயருக்கு மிகப்பெரிய களங்கத்தை ஏற் படுத்தும். HSBC வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜோர்ஜ் எல்ஹெடெரி, சர்வதேச முதலீட்டு மாநாடொன்றில் ஆசிய நாடுகளின் எரிபொருள் செலவுகள் குறித்துப் பேசியிருந்தார்.

HSBC அதிகாரி குறிப்பிட்ட 286 டொலர் என்பது மசகு எண்ணெய் (Crude Oil) விலை அல்ல. அது சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் நுகர்வோரைச் சென்றடையும் வரையிலான (Door todoor) ஒட்டுமொத்தச் செலவாகும். இலங்கை ஒரு பீப்பாய் மசகு எண்ணெய்க்கு 286 அமெரிக்க டொலர்களைச் செலுத்தியதாக HSBC வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜோர்ஜ் எல்ஹெடெரி கூறியதாகக் கூறி, அவருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளமை முற்றிலும் வெட்கக்கேடானது. மசகு எண்ணெய் விலைக்கும், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் விலைக்கும் இடையிலான அடிப்படை வித்தியாசத்தைக் கூடப் புரிந்து கொள்ளாமல், அரசாங்கம் அவருக்குப் 'பாடம் புகட்ட' முனைவது வேடிக்கையானது. சர்வதேச வங்கியொன்றின் தலைமை அதிகாரியின் பகுப்பாய்விற்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பது, இலங்கையில் கருத்துச்சுதந்திரம் மற்றும் பொருளாதாரத் தரவுகள் மீதான வெளிப்படைத்தன்மை குறித்த அச்சத்தை முதலீட்டாளர்களிடையே ஏற்படுத்தும். உண்மைகளைச் சரியாக ஆராயாமல் உலகளாவிய நிதி நிறுவனங்களுடன் மோதலில் ஈடுபடுவது, எதிர்காலத்தில் இலங்கை சர்வதேசக் கடன்களைப் பெறும்போது தடைகளை உருவாக்கலாம் - என்றார். (ச-இ)

# பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.20

தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளம் குடும்பப் பெண் உயிரிழந்துள்ளார்.

நீர்வேலி, சிறுப்பிட்டியைச் சேர்ந்த 27 வயதுப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி கணவனுடன் முரண்பட்டு பெற்றோல் ஊற்றித் தீயிட்டுக்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். (எ-26)



நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் ஆறாம் திருவிழாவான வசந்தோற்சவம் கடந்த சனிக்கிழமை ஆலய முன்றலில் இடம்பெற்றது. (க-17)

**வேலையாட்கள் தேவை**

நெல்லியடிப் பகுதிக்கு மேசன் மற்றும் மேசன் உதவியாளர்கள் தேவை.

**077 227 1217**

(cs 61263) N-1

**காணி விற்பனைக்கு**

நாவற்குழியில் 55 பரப்பும், 7 1/2 பரப்பும், அராலியில் 450 பரப்பு காரைநகர் வீதியில் இருந்து 1Km தூரத்தில் கடற்கரை முன்பாக தொழிற்சாலை அமைக்க கூடிய உகந்த இடம் விற்பனைக்கு உள்ளது.

**077 665 9735, 076 071 2676, 077 662 6117**

(cs 61244) N-1

**1ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு 12.03.1953 — உதிர்வு 22.04.2025

கடந்த (22.04.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த

**அமரர் இம்மனுவேல் றொபின்சன் றோய்**

(பழைய மாணவன் - புனித பத்திரிசியார் கல்லூரி)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுத் திருப்பலி 22.04.2026 புதன்கிழமை காலை 5.45 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அன்னாரின் நினைவுத் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாஷையூர் — குடும்பத்தினர்

(cs 61225) N-1

**மரண அறிவித்தல்**

தோற்றம் 18.04.1940 — மறைவு 18.04.2026



**மகேஸ்வரி குலேந்திரன் (மணி)**

சாவகச்சேரி கோவில் குடியிருப்பு கச்சாய் வீதியை பிறப்பிடமாகவும், கொழும்பு, நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, சாவகச்சேரி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி குலேந்திரன் (மணி) அவர்கள் 18.04.2026 சாவகச்சேரியில் காலமானார்.

அன்னார் குலேந்திரன் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் இளைய புத்திரியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பகவதி தம்பதியரின் அன்பு மருமகளும், வான்மதியின் பாசமிகு தாயாரும், (அவுஸ்ரேலியா), ஸ்ரீகுமாரின் மாமியாரும், அபிராமி, விசாலினி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களான துரைராஜா, திரவியம், காந்திமதி, செல்வராஜா மற்றும் பவளராணி, இராமச்சந்திரன் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற கணேசன் மற்றும் இராசேந்திரன், அருந்ததி, சந்திரபூபதி (ராணி), இராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரன், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.04.2026) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

**குலேந்திரன் (கணவர்)- +94-77-272-0595**

**இராஜேந்திரன் (மைத்துனன்)- +94-77-548-7089**

**ரமணன் இராமச்சந்திரன் (பெறா மருமகன்)- 011416-670-6467 (கனடா)**

(cs 61245) N-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.